# 19. தாய்ப்பால்

ஒரு தினுசான சப்தம் கேட்டு எட்டிப் பார்த்தாள் சகுந்தலா. வாசலில் மோட்டார் சைக்கிளில் ஸ்ரீதர் தெரிந்தான். கூடவே அவனது சினேகிதன் ராம்.

''வாப்பா ஸ்ரீதர்.. ராம் நீயும்தான்!'' -வரவேற்றாள் சகுந்தலா. ஸ்ரீதர் ஒரு சகஜ சிரிப்புடன் சோபாவின் மேல் அமர்ந்து ஷூவைக் கழட்டத் தொடங்கினான். ராமுவும் சோபாவில் சாய்ந்து கொண்டான்.

ஸ்ரீதர், சகுந்தலாவுக்கு ஒரே பிள்ளை.

ஐ.ஐ.டி.யில் எம். டெக்கெல்லாம் படித்தவன். அந்தப் படிப்புக்கெல்லாம் சேலத்தில் நல்ல வேலை இல்லை!

கர்னாடகாவில் தும்கூருக்குப் பக்கத்தில் ஒரு நிறுவனத்தில் முப்பதாயிரம் சம்பளத்தில் வேலை பார்க்கிறான். மூன்று மாதங்களுக்குப் பிறகு இப்போதுதான் ஊருக்கு வந்திருக்கிறான்.

''என்ன ஆண்ட்டி.. பய மூணுமாசம் கழிச்சு வந்துருக்கான். உங்ககிட்ட பெருசா ஒரு எக்ஸைட்மென்ட்டும் இல்லியே..'' -ஆரம்பித்தான் ராமு.

''என்ன பண்ணணும்ங்கறே. முதல்ல இந்த காபியைக் குடிங்க''- என்று காபி தம்ளரை நீட்டினாள்.

''ஏண்டா... நீயும் கேஷுவலா வந்து நிக்கறே. ஆமா... பங்கம்மா அப்பாவுக்கு எதுவும் வாங்கிட்டு வரலியா?''

''தும்கூர்ல புளிதான் ஃபேமஸ். அதைச் சுமந்துகிட்டு வரச் சொல்றியா?''

''ஏன் பக்கத்துலதானே பெங்களூர், மைசூர்லாம் இருக்கு. அங்கல்லாம் போய் வாங்கிட்டு வரலாமே?''

-ராமின் மடக்கல் வேலை செய்தது. ஸ்ரீதர் மௌன மானான். காபியைச் சூப்பினான். அதில் சர்க்கரைக் குறையை உணர்ந்தவன் அப்படியே வைத்தான்.

''ஏம்ப்பா?''

''வழக்கம்போல் சர்க்கரை போட மறந்துட்டேன். வேற என்ன?'' -இறுக்கமான குரலில் சொன்னாள். தாய் மக னிடம் பேசுவது போலவே இல்லை. ராமுவும் கவனித்தான். பேச்சை மாற்ற விரும்பினான்.

''ஆமாம், என்னடா திடீர்னு கிளம்பி வந்துருக்கே?''

''என்னமோ தோணிச்சு... அதான் ஒரு நாலுநாள் லீவு போட்டுட்டு ரயில் ஏறிட்டேன். சரி சரி... நீ போய் உன் வேலையை முடிச்சுட்டு வா. நானும் குளிச்சுட்டு ரெடியா இருக்கேன். நல்ல சினிமாவா எதுக்காவது போகலாம்.''

ஸ்ரீதர் மெல்ல கலகலப்புக்கு மாறி எழுந்து நின்று சோம்ப லெல்லாம் முறித்தான். ராமுவும் தன் ஹெல்மெட்டைத் தூக்கி தண்ணிக்குடம் போல இடுப்பில் வைத்துக் கொண்டு புறப்பட்டுப் போனான்.

சகுந்தலா மட்டும் அவனையே வெறித்துக் கொண்டிருந்தாள்.

''என்னம்மா... எதுக்கு அப்படி வெறிக்கறே?''

''வெறிக்காம... பொங்கலுக்கு வான்னப்போ வரலை. உன் அப்பா பொறந்த நாளைக்கு வான்னப்போ வரலை. இப்ப ஒரு காரணமும் இல்லாம திடுதிப்புன்னு வந்து நிக்கறியேப்பா...''



-சகுந்தலா அமட்டலாகப் பேசி வருந்தினாள். அப் பொழுது அவன் ஒரு இன்லண்ட் லெட்டரை எடுத்து அவள் எதிரில் நீட்டினான்.

''என்ன இது?''

''படி...''

அவளும் படிக்கத் தொடங்கினாள்.

*அன்புள்ள ஸ்ரீதர் கண்ணுக்கு!*

*சின்னம்மிணி ஆசீர்வாதத்துடன் எழுதிக் கொள்வது, என்ன கண்ணு... இப்படி போனா போன இடம்னு போய் உட்கார்ந்துக் கிட்டே....? இங்க உன் அம்மாவும் அப்பாவும் நீ நல்லா சாப்பிடுறியா, தூங்கறியான்னுல்லாம் எவ்வளவு கவலைப்படறாங்க தெரியுமா? அவங்கள பார்க்கவே பரிதாபமா இருக்கு கண்ணு. என்னையும் அந்த லிஸ்ட்ல சேர்த்துக்க கண்ணு. எனக்கு நீ கண்ணுலயே இருக்கே.*

*ஒரு பொண்ணு பெரிய மனுஷியாகற நேரம் நல்ல நேரமா இருக்கணும் கண்ணு. நான் திரண்ட நேரமே சரியில்லை. அதான் புருஷன் புள்ளைன்னு யாரும் எனக்குத் தங்கலை.*

*ஏதோ உன் அம்மா அப்பா தயவுல உங்க வீட்ல வேலைக் காரியா காலத்தை ஓட்டிட்டேன். உன் பாசம்தான் இந்த உலகத்துல எனக்கு வஞ்சனையில்லாம கிடைச்ச ஒரே விஷயம். இப்ப மூணு மாசமா அதுக்கும்கூட தட்டுப்பாடு. இப்ப கேக்கறேன். ஒருவாட்டி வந்துட்டுப் போ ராசா... வந்து உன் கையால ஒரு டம்ளர் பால் கொடு. உன்னை கடன்காரனா வைக்க, இந்த அம்மிணிக்குப் பிரியமில்லை.*

*இப்படிக்கு*
*சின்னம்மிணி*

-கடிதத்தைப் படித்து முடித்த சகுந்தலா சற்றே வெளிறிய முகத்துடன் நிமிர்ந்தாள்.

''அம்மிணிம்மா இப்ப எங்க...? நான் வந்து இருபது நிமிஷம் ஆச்சு. எட்டிக்கூட பார்க்கலையே. மார்க்கெட்டுக்கு அனுப்பியிருக்கியா?''

-சட்டையைக் கழட்டி ஹேங்கரில் மாட்டியபடியே கேட்டான்.

சகுந்தலா மென்று விழுங்கியவளாக ''அவ விஷயம் முடிஞ்சு போச்சுப்பா!'' என்றாள் திக்கித்திணறி. அவனுக்கு சுரீர் என்றது.

''என்னம்மா சொல்றே?''

''நேத்து காலம்பற நெஞ்சுவலி அதிகமாயிடிச்சு. உன் அப்பா டாக்டர்கிட்ட கூட்டிக்கிட்டுப் போனார். வழியிலேயே மூச்சு நின்னு போச்சாம்...!''

''மைகாட்... அப்புறம்?''

''நல்லவிதமா அவளை அடக்கம் பண்ணிட்டு வந்தார்...''

அப்படியே அயர்ந்துபோனவன், அறைக்குப்போய் கதவை இறுக மூடிதாழிட்டுக் கொண்டான்.

சகுந்தலா நடுவில் குளிக்க, சாப்பிட என்று கதவைத் தட்டித் தட்டிப் பார்த்து அலுத்து விட்டாள். கணவனுக்கு போன் செய்து தகவலைக் கூறவும், லஞ்ச் பிரேக்கில் அவர் தன் ஸ்கூட்டரில் பறந்துவந்தார். அவரும் கதவைத் தட்டித் தட்டிப் பார்த்தார். ஸ்ரீதருக்கு ஏனோ எழுந்திருக்கவே பிடிக்கவில்லை. ஆனால் அப்பா-அம்மா பேசிக்கொள்வது நன்றாகவே காதில் விழுந்தது.

''இதத்தான் சகுந்தலா தாய்ப்பாசம்ங்கறது. தான் ஆடாவிட்டாலும் சதையாடும்னு சொல்றதுக்கெல்லாம் அர்த்தம் இதுதான்.

உன்னால் கொடுக்க முடியாத தாய்ப்பாலை அவ கொடுத்துக் கொடுத்து வளர்த்தா பாரு. இது அதால வந்த பாதிப்புடி.



நான் வேண்டாம் வேண்டாம்னு சொன்னேன். இல்ல குழந்தை சவலையாயிடும்னு நீதான் கேக்கல. அவளும் என்னவோ தன்பிள்ளைக்குக் கொடுக்கற மாதிரி கொடுத்தா கொடுத்தா... அப்படிக் கொடுத்தா, இப்ப பார்! அது படுத்தற பாட்ட...''

-அப்பா சொன்னதைக் கேட்ட நொடி ஸ்ரீதருக்கு உச்சி மண்டையில் ஒரு மின்னல் வெட்டியது போல இருந்தது. கடிதத்தில் சின்னம்மிணி எழுதியிருந்த வரிகளுக்கு இப்போது அர்த்தம் புரிந்தது.

-ஆவேசமாக கதவைத் திறந்து கொண்டு வெளியில் வந்தான். ஓடிப்போய் அப்பாவைக் கட்டிக் கொண்டவன் ''அப்பா ரொம்ப தேங்க்ஸ்ப்பா... இப்பவாவது இந்த உண்மையைச் சொன்னீங்களே'' என்றவன் ஓடிப்போய் ஃப்ரிட்ஜைத் திறந்தான். பால்பாக்கெட்டுகளை அள்ளி வெளியே எடுத்தவன் ஒரு செம்பில் அதை நிரப்பிக் கொண்டான். அப்படியே திரும்பி அப்பாவைப் பார்த்தான். அவருக்குப் புரிந்துவிட்டது.

''எங்கப்பா... சுடுகாட்டுக்கா...?''

''ஆமாம்ப்பா...'' அவன் குரல் கூட உடைந்து போனது.

''இந்தப் பால் கம்மிப்பா. போற வழியில ஒருகுடமே வாங்கிப்போம். புறப்படு!'' என்றார் அவர் அமைதியாக.

-இருவரும் புறப்பட்டனர்.

''இருங்க நானும் வரேன்...'' -சகுந்தலாவும் சேர்ந்து கொண்டாள். எல்லாப் பாலையும் அங்கே தாய்ப்பால் வென்றுவிட்டதைப் பார்க்க முடிந்தது.